**செய்தி வெளியீடு எண்: 165** **நாள்: 06.03.2018**

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**
**நாள் : 6.3.2018**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
அரசுத் துறை செயலாளர்களே!
துறைத் தலைவர்களே!
மாவட்ட ஆட்சித் தலைவர்களே மற்றும்
அரசு அதிகாரிகளே!

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது குறித்து நேற்று நாம் ஆக்கபூர்வமான விவாதத்தை நடத்தினோம். இன்று, நாம் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்கள் குறித்து கலந்து ஆலோசிக்க உள்ளோம்.

மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து, மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கு இம்மாநாடு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட நிர்வாகத்திற்கு இந்த நேரத்தில் என்னுடைய மனதார நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் ‘‘பொன் விழா ஆண்டாக’’ இந்த ஆண்டினை கொண்டாட தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்டம் தோறும் விளையாட்டுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும். இப்போட்டிகளின் முத்தாய்ப்பாக சென்னையில் ஒரு மாபெரும் விழா நடத்தப்பட உள்ளது.

**‘‘என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன’’**

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அனைத்து திட்டங்களையும், மாண்புமிகு அம்மாவின் அரசு சமுதாயத்தில் மிகவும் நலிந்த நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், முதியோர், பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு கொண்டு சேர்ப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு முனைப்புடன் கண்காணித்திட வேண்டும்.

"**சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்**" எனும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, உழவுத் தொழிலின் வளர்ச்சி, ஒரு நாட்டின் பசி, பிணியை போக்குவது மட்டுமல்லாது, பிற தொழில் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றது. சென்ற ஆண்டு நமது மாநிலத்தில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் இடுபொருள் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டது. மேலும், பயிர்க் காப்பீட்டு திட்டத்தை நீங்கள் செம்மையாக செயல்படுத்திய காரணத்தினால், இதுவரை 3,046 கோடி ரூபாய் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு அரசு காப்பீட்டு நிறுவனங்களிலிருந்து பெற்றுத் தந்து, சாதனை படைத்துள்ளது. இத்தொகை வேளாண் பெருங்குடி மக்களுக்கு படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயப் பெருமக்களின் வருவாயை பெருக்கும் வண்ணம் நமது அரசு, ஒருங்கிணைந்த கூட்டுப் பண்ணய திட்டம், நீடித்த மானாவாரி வேளாண்மைக்கான இயக்கம், விநியோக தொடர் மேலாண்மை, நீரா பான உற்பத்தி அனுமதி போன்ற முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டங்களைப்பற்றி விவசாய பெருமக்கள் முழுமையாக தெரிந்து கொண்டு பயன்பெற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழிகாட்டியாக செயல்பட வேண்டும்.

சிறந்த நீர் மேலாண்மை மூலம் குறைந்த நீர் வளத்தில் நிறைந்த வருவாய் பெற நுண்ணீர் பாசன திட்டத்தை பரவலாக செயல்படுத்திட வேண்டும்.

வேளாண் பெருமக்கள் கூடுதலாக வருமானம் பெற ஏதுவாக பயிர்த் தொழில் மட்டுமன்றி, அதனைச் சார்ந்த விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம், கோழிகள் வளர்ப்பு மற்றும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை முழு முனைப்புடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்த வேண்டும்.

வேளாண் பயிர் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நல்ல விலை கிடைத்திட, உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களை பெருமளவில் உங்கள் மாவட்டத்தில் உருவாக்கிட வேண்டும். அதற்காக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

"**வரப்புயர நீர் உயரும்,**
**நீர் உயர நெல் உயரும்,**
**நெல் உயர குடி உயரும்**"

எனும் ஔவைப் பிராட்டியின் வாய்மொழிக்கேற்ப, தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசால் விவசாயிகளின் பங்களிப்புடன் குடிமராமத்து பணிகள் துவக்கி வைக்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் இன்றியும், தூர் வாரியும் நீர்நிலைகளின் முழு கொள்ளளவினை பராமரிக்க வேண்டும்.

மேலும், விவசாயிகளின் நலனுக்காக, கட்டணமில்லா வண்டல் மண் வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும்.

அந்தந்த ஆயக்கட்டுப் பகுதிகளில் உள்ள விவசாயிகளைக் கொண்டு பாசன விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு, பொதுப் பணி மற்றும்

வேளாண்மைத் துறையினரை ஒருங்கிணைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 70வது பிறந்த நாளை ஒட்டி, 70 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் துவக்கியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் தகுந்த இடங்களைத் தேர்வு செய்து தொடர் பராமரிப்பின் மூலம், பசுமைப் போர்வையை அதிகப்படுத்த வேண்டும்.

கல்வித் தரத்தைக் கொண்டு தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் அளவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு, பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, அரிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை பெரிய அளவில் ஏற்படுத்திக் கொடுத்து, பள்ளிக் கல்வித் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புதிய பாடத் திட்டம் அறிமுகம், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், அறிவுத் திறன் வகுப்பறைகள் ஆகியவை இவற்றுக்குச் சான்றாகும். இத்திட்டங்களினால் உங்களது மாவட்டங்களில் மாணவர் சேர்க்கை விகிதம் அதிகரிக்க வேண்டும். இடைநிற்றல் அறவே தடுக்கப்பட வேண்டும். தேர்ச்சி விகிதம் அதிகரிக்க வேண்டும். மாணாக்கர்களின் தன்னம்பிக்கை பன்மடங்கு பெருக வேண்டும். இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்க, பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, மனவள ஆலோசனைகள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பள்ளிகளில் இயங்கி வரும் சத்துணவு மையங்கள், குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்கள் சரியான முறையில் இயங்குகின்றனவா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இந்த மையங்கள் தேவையான குடிநீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன், குறைபாடுகளின்றி இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டும்போது, தேவையான குடிநீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் ஒருங்கிணைத்து ஏற்படுத்த வேண்டும். அதனை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுப் பணித் துறையினர் மூலமாக நிறைவேற்ற தக்க நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

சமூக பாதுகாப்புத் திட்டங்களான படித்த ஏழை பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களின் பணிகளையும், மகளிர் சுய உதவி குழுக்களின் செயல்பாடுகளையும், தொடர்ந்து கண்காணித்து, இடர்பாடுகள் ஏதும் இருப்பின், அவற்றினை உடனடியாக களைய வேண்டும். இத்திட்டங்களுக்கு, வெளிப்படையான தன்மையோடு தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு பயன்கள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதிகள், கழிப்பறை வசதிகள் மற்றும் தெரு விளக்கு வசதிகள் உள்ளனவா என ஆய்வு செய்து, அவ்வசதிகள் இல்லாத இடங்களில் அவற்றை உடனே அமைக்கவும், முறையாக பராமரிக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணாக்கர்களுக்கான விடுதிகளில் அடிப்படை வசதிகள் உள்ளனவா என ஆய்வு செய்து, அவ்விடுதிகளை சரிவர பராமரிக்க வேண்டும்.

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தற்போது நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் முறையாக மக்களை சென்றடைய, ''**மின்னணு அட்டை**'' திட்டத்தினை இந்த அரசு, வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்ய, நியாய விலைக் கடைகள் மற்றும் உணவுப்பொருள் கிட்டங்கிகளில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் இயங்கி வரும் ''**அம்மா உணவகங்கள்**'' ஏழை, எளிய மக்களின் அட்சய பாத்திரமாக விளங்குகிறது. இவை தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

சுகாதாரக் குறியீடுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய மாவட்டங்களில் தாய்–சேய் இறப்புகள் ஏதும் இல்லை என்ற நிலையை எய்திட தனி கவனம் செலுத்த வேண்டும்.

தொற்று நோய்களிலிருந்து பொது மக்களைக் காப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத் துறைகளை ஒருங்கிணைத்து, ஆரம்ப நிலையிலேயே தொற்று நோய்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கட்டுப்படுத்திட வேண்டும்.

பொதுமக்களிடையே சரியான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, தனிநபர் மற்றும் பொது கழிப்பிடங்களை, இடத்திற்கேற்றவாறு கட்டி, தமிழ்நாடு ''திறந்த வெளி கழிப்பிடமற்ற மாநிலம்'' என்ற சிறப்பினை எய்திட வேண்டும்.

திடக் கழிவு மேலாண்மை மூலம் குப்பைகளை தரம் பிரித்து, மறு சுழற்சி மற்றும் உரம் தயாரித்தல் போன்ற முயற்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

நீங்கள் எப்போதும் மக்கள் நலனைச் சிந்திப்பவர்களாகவும், மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுபவர்களாகவும், சட்டம் ஒழுங்கு, இயற்கை இடர்பாடு, உள்ளூர் பிரச்சனை ஏற்படும் நேர்வுகளில், களத்திற்கு நேரடியாகச் சென்று மக்களின் துயர் துடைக்கும் சேவகர்களாகவும் இருக்க வேண்டும் என்பதும், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு சற்றும் குறைவில்லாமல் உங்களது பணி அமைய வேண்டும் என்பதும் எனது விருப்பம். அதை நீங்கள் அனைவரும் நிறைவேற்றுவீர்கள் என நான் நம்புகிறேன்.

சென்ற ஆண்டு போதிய பருவமழை இல்லாதபோதும், வறட்சியை திறம்பட சமாளித்து, மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்து, அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தந்தீர்கள். அதே போன்று, இந்த ஆண்டு கோடைக் காலத்திலும் ''குடிநீர் பிரச்சனை இல்லை'' என்ற நிலையினை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

பொது மக்கள் அலைச்சல் இல்லாமல் பல்வேறு துறைகளின் சேவைகளை அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வழங்கும் வகையில், பொது சேவை மையங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகின்றது. இம்மையங்கள் செம்மையாக செயல்பட்டு வருகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து, குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

சாலைகள், பாலங்கள், அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு தேவைப்படும் நிலங்களுக்கான நில எடுப்புப் பணிகள் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு தகுதியான அலுவலர்களை நியமித்து, அப்பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் பட்டா மாறுதல் உத்தரவுகள் வழங்கும் நேர்வுகளில், கிராமம் முதல் மாவட்ட அளவிலான அனைத்து நில ஆவணங்களிலும் தக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாவட்ட வருவாய் அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். இதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காலமுறையில் தணிக்கை செய்திட வேண்டும்.

பல்வேறு துறைகளின் மூலமாக வழங்கப்படும் சான்றிதழ்களை, உரிய கள ஆய்வு மூலம் விசாரணை மேற்கொண்டு கள ஆய்வு செய்து, தகுதி வாய்ந்த நபர்களுக்கு மட்டுமே விரைவாக வழங்க வேண்டும். இவ்வினத்தில் தவறுகள் ஏதேனும் நடந்தால், உரிய அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயக்கம் காட்டக் கூடாது.

அரசு ஊழியர்களின் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மிக முக்கியமாக, 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தி, மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்கி உள்ளது. மேலும், அரசு ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு மாவட்டங்களில் வீட்டு வசதி வாரிய பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளை தமிழ்நாடு அரசு கட்டி வருகிறது. .

கோப்புகள் என்பது வெறும் காகிதங்கள் அல்ல. அவற்றின் பின்னணியில் தனி மனித வாழ்க்கையோ, பிரச்சனைகளோ அல்லது சமுதாயத் திட்டங்களோ உள்ளன. அதனால், நீங்கள் கோப்புகள் தேங்கா வண்ணம் விரைவாகவும், உடனடியாகவும் அவற்றிற்கு தீர்வு காண வேண்டும்.

பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென வாரந்தோறும் ‘‘அம்மா திட்டம்’’, ‘‘மக்கள் குறை தீர்க்கும் நாள்’’, மாதந்தோறும் ‘‘மனுநீதி நாள்’’, ‘‘மீனவர் மற்றும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள்’’ போன்றவைகளை நடத்தி வருகிறீர்கள். அப்போது பெறப்படும் அனைத்து மனுக்களின் மீதும் தனி கவனம் செலுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதன் மூலம், அரசின் மீது பொது மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

மக்கள் பிரச்சனைகளை சார்நிலை அலுவலர்கள் மூலம் அறிந்து, அதனை துரிதமாக தீர்க்க வேண்டும். உங்களுடைய அளவில் தீர்க்க முடியாத பிரச்னைகளை, அரசின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு இந்த மாநாடு ஒரு சிறந்த இடமாகும்.

தங்கள் மாவட்டங்களிலுள்ள முக்கிய அம்சங்கள் குறித்து ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**